# பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு

# எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்

# வெற்றிடங்கள்

எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தில் நிலவும் பின்வரும் வெற்றிடத்தை நிரப்புவதற்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி** - **உதவி அத்தியட்சகர்கள்**
**ASSISTANT SUPERINTENDENTS**

**தகைமைகள்** - **வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் விவசாயம் / தோட்ட முகாமைத்துவத் துறையில் ஆரம்பப் பட்டம்

**அத்துடன்**

2. தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய கலப்புப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் 01 வருடகால மேற்பார்வை அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய கலப்புப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை துறையில் 1ஆம் தர முகாமைத்துவ உதவியாளர் வகுதி பதவியில் குறைந்தபட்சம் 05 வருடகால அனுபவம்

**ஏனைய அனுகூலங்கள்** - வெளிவாரி சிகிச்சை மற்றும் தங்கி சிகிச்சைபெறும் வசதிகளுடனான மருத்துவ காப்புறுதித் திட்டம்.

ஊழியரினால் தமது சம்பளத்தின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அல்லது இலங்கை பெருந்தோட்டவியலாளர்களின் சேமலாப சங்கத்திற்கு குறைந்தபட்சம் 10% பங்களிப்பை வழங்குதல் வேண்டும் என்பதுடன் எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தினால் இதற்காக 12% பங்களிப்புடன் மேலதிகமாக 3% பங்களிப்பை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு வழங்கும்.

**சம்பள அளவு** - மேற்கூறிய பதவிக்காக 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் JM 1-1-2016 ரூபா [42, 600 - 10x755 - 18x1,135 - 70, 580/-] உரித்தாகும்.

**வயது** - 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**ஆட்சேர்க்கும் நடைமுறை** - நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

**கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு**

| | | |
|---|---|---|
| ● இயைபுடைய மேலதிக அனுபவம் | - | 30 புள்ளிகள் |
| ● இயைபுடைய மேலதிக தகைமைகள் | - | 30 புள்ளிகள் |
| ● ஏனைய சாதனைகள் | - | 15 புள்ளிகள் |
| ● நேர்முகத் தேர்வில் காட்டும் செயற்திறன் | - | 25 புள்ளிகள் |
| மொத்தம் | - | 100 புள்ளிகள் |

**ஏனையவை** - இந்தப் பதவிகளுக்காக மேற்கொள்ளப்படும் சகல நியமனங்களும் குறித்த ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவங்கள்** - விண்ணப்பதாரரினால் சகல விபரங்கள் மற்றும் பிறப்பத்தாட்சிப் பத்திரம், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவங்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த விண்ணப்பப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் - 2024 டிசம்பர் மாதம் 20ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**தலைவர்,**
**எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்,**
**ரத்வத்த, உக்குவளை.**
**066-2245518**

2024-12-12.